Nestlé Good food, Good life

# பத்திரிகை வெளியீடு

கொழும்பு, 2023 ஆகஸ்ட் 29

## மெகி (MAGGI) தனது புதிய மேம்படுத்தப்பட்ட சுவை மற்றும் பொதியிடலுடன் தனித்துவமான அறிமுக நிகழ்வொன்றில் பப்பரே கொத்துவை (Papare Kottu) அறிமுகப்படுத்தியுள்ளது

நெஸ்லே நிறுவனத்தின் நூடில்ஸ் வர்த்தகநாமமான, MAGGI Papare Kottu, புதிய சுவை வடிவங்கள் மற்றும் பொதியிடலுடன் அண்மையில் சமூக ஊடகங்களில் முன்னிலையில் செல்வாக்கு செலுத்துபவர்களும், பிரபல நட்சத்திரங்களுமான ஷனுத்ரி பிரியசாத், தினேஷ் கமகே, துஷ்யந்த் வீரமன் மற்றும் ஸ்டெ∴பானி சிறிவர்தன ஆகியோரைக் கொண்ட ஒரு புதிய துள்ளலான இசை வீடியோவுடன் அறிமுகப்படுத்தப்பட்டது.

புதிய மேம்படுத்தப்பட்ட தயாரிப்பு மற்றும் பொதியிடல் "Break-up" விருந்து என்ற தலைப்பிலான ஒரு நிகழ்வில் வெளியிடப்பட்டதுடன், இது வெளியீட்டு நிகழ்வுக்கு முன்னதாகவே சமூக ஊடகங்களில் புயலைக் கிளப்பிய ஒரு புத்தாக்கமான கோட்பாடாகும்.

படிப்பு இடைவேளையாக இருந்தாலும் சரி, பணி இடைவேளையாக இருந்தாலும் சரி, எப்படி வாழ்க்கைக்குத் தேவையான இடைவேளைகளை MAGGI Papare Kottu ஆல் உற்சாகப்படுத்த முடியும் என்பதை எடுத்துக்காட்டுவதுடன், வெளியீட்டு நிகழ்வின் போது சமூக ஊடக விளம்பர பிரச்சாரத்தில் சமூக ஊடகங்களில் செல்வாக்கு செலுத்துவதில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் 'Break-Up' இன் அவசியத்தைப் பற்றி மர்மமான முறையில் உரையாடியதுடன், அவர்களின் சமூக தளங்களில் புதிய தயாரிப்பு வரிசையை அறிமுகப்படுத்துவதற்கான பேராவல் மற்றும் உற்சாகத்தை உருவாக்குவதற்கான முன்னோடியாக செயற்பட்டனர்.

இதன் விளைவாக, Y FM வானொலி அலைவரிசையின் ஏற்பாட்டில், சிரச தொலைக்காட்சி ஸ்டைன் ஸ்டுடியோவில் நடைபெற்ற 'Break-Up' விருந்தின் வெளியீட்டு நிகழ்வில், 500 க்கும் மேற்பட்ட வர்த்தகநாம ரசிகர்கள் பேரார்வத்துடன் பங்கேற்றனர்.

மிகவும் களிப்பூட்டும் வெளியீட்டு நிகழ்வில் பல பிரபலங்கள், சமூக ஊடகங்களில் செல்வாக்கு செலுத்துபவர்கள் மற்றும் இளைஞர்,யுவதிகள் புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட MAGGI Papare Kottu ஐ வரவேற்றனர்.

30 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையிலுள்ள குடும்பங்கள் மத்தியில் மிகவும் நேசிக்கப்படும், MAGGI நூடில்ஸ், மிகச்சிறந்த மூலப்பொருட்களைப் பயன்படுத்தி இலங்கையில் தயாரிக்கப்படுகிறது. பரந்த அளவிலான தயாரிப்புகளுடன், புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட MAGGI Papare Kottu ஐ நாடு முழுவதும் உள்ள இலங்கை மக்களுக்கு MAGGI வழங்குகிறது.

1906 ஆம் ஆண்டு இலங்கையில் தனது செயற்பாடுகளை ஆரம்பித்து, நெஸ்லே இன்று 115 ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கை மக்களின் வாழ்வில் ஒரு அங்கமாக மாறியுள்ளது. கடுமையான பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாடுகளைப் பயன்படுத்தி, குருநாகலிலுள்ள தனது அதிநவீன தொழிற்சாலையில், இலங்கையில் விற்பனை செய்யப்படும் 90% க்கும் அதிகமான தயாரிப்புகளை அது உற்பத்தி செய்கிறது. ‘தற்போதைய மற்றும் எதிர்கால தலைமுறைகள் என அனைவரதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு உணவின் ஆற்றலை வெளிக்கொண்டு வருதல்’ என்ற அதன் நோக்கத்தால் உந்தப்பட்டு, நெஸ்லே நிறுவனம் இலங்கையில் தலைமுறை தலைமுறையாக இளமை முதல் முதுமை வரை உயர்தர உணவு மற்றும் பான வகைகள் மூலம் ஊட்டமளித்து வருகிறது.

---


**தொடர்புகளுக்கு:**

| | | | |
|---|---|---|---|
| நிறுவன பொது விவகாரங்கள் | தமித குலதுங்க | +94777915949 | Damitha.Kulatunga@lk.nestle.com |